## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை), ஆண்டு I – 2021

### அரசியலமைப்புச் சட்டம் - I

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு **மாத்திரம்** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. ‘ஏதேனும் குறைபாடுகள் இருந்தபோதிலும், சட்டவாட்சிக் கோட்பாடானது அரச தத்துவங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் தனியார் சுதந்திரத்தினை மேம்படுத்தல் என்பவற்றுக்கு பகுத்தறிவுடன் கூடியதொரு தத்துவ அடிப்படை ஒன்றினை வழங்குகின்றது. இருப்பினும், ‘அரசியலமைப்பபிமாணியக் கருத்தேற்பு’ இக்குறிக்கோள்களை உறுதிப்படுத்துவதில் மேலும் விரிவானது.’

    மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அறிவார்ந்த விவாதங்கள் மற்றும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களுடன் ஆதாரப்படுத்தி மேலுள்ள கூற்றை பரிசீலனை செய்க.

    (100 புள்ளிகள்)

02. சொலோனிகா என்ற அரசானது, அண்மைய கடந்த காலத்தில், வெளிநாட்டு இருப்புக்களின் குறைபாடு காரணமாகவும், பணவீக்கம் மற்றும் உணவு உற்பத்தியிலும் விநியோகத்திலுமான பற்றாக்குறை என்பன காரணமாகவும் பாரிய பொருளாதார நெருக்கடியொன்றிற்கு முகம்கொடுத்தது. இந்நிலமையை நிவர்த்தி செய்ய, தொடர்புபட்ட பகுதிகளில் விரைவான தீர்மானங்களை எடுப்பதில் சனாதிபதியை ஈடுபடுத்த அதிகாரமளிக்கும், நாட்டின் தற்போதிருக்கும் குறித்த சட்டங்களை திருத்த அமைச்சரவை தீர்மானித்தது. இதற்கு மறுமொழியாக, சொலோனிகாவின் பாராளுமன்றமானது வர்த்தகம், நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு விநியோகம் என்பனவற்றுடன் தொடர்புபட்ட பல சட்டங்களுக்கு குறித்த திருத்தங்களை உருவாக்க விரும்பியது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திருத்த வரைவு ஏற்பாடுகளானது சொலோனிகாவினது உயர்நீதிமன்றத்தின் முன்னிலையில் கேள்விக்குட்படுத்தப்பட்டது. உயர்நீதிமன்றமானது சட்டமூலத்திலிருந்து குறித்த ஏற்பாடுகளை நீக்குமாறு பாராளுமன்றத்தை கேட்டுக்கொண்டதுடன், முன்மொழியப்பட்ட ஏற்பாடுகளுக்கு

மேலதிக பரிந்துரைகள் செய்யப்பட்டமையோடு, இணங்கவில்லையெனின், சட்டமூலத்தின் சில ஏற்பாடுகள் சொலோனிகா அரசியலமைப்புடன் ஒத்துப்போகவில்லையென அது கண்டறிந்தமையால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதனைப் பரிந்துரை செய்தது.

எவ்வாறாயினும், தேவையேற்படும் போது அவர்கள் சார்பாக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க சொலோனிகா மக்களால் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும், உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்றிலிரெண்டு பெரும்பான்மை கட்டாயமில்லை என்பதும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தாகும். அதனால், பாராளுமன்றத்தின் குழு விவாத நிலையில் (committee stage) தேவைப்படுத்தப்பட்ட மாற்றங்களைச் செய்து வரைவு திருத்தங்களை சாதாரண பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாம். எதுவாக இருந்தாலும், பாராளுமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரமானது வெளி அமைப்புக்களால் குறைமதிப் பிற்குட்படுத்தப்பட முடியாதென சொலோனிகா பாராளுமன்றத்தின் சபாநாயகர் பாராளுமன்றத்தில் பிரகடனம் ஒன்றினைச் செய்தார்.

மேலுள்ள சந்தர்ப்பத்தின் பின்னணியில், பொருத்தமான அரசியலமைப்பு கோட்பாடு/கோட்பாடுகள் மற்றும் அதன்/அவற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. சொலோனிகா அரசின் அரசியலமைப்புப் பின்னணி மற்றும் நியமங்கள் இலங்கையினை ஒத்ததாகக் கருதிக்கொள்க.

(100 புள்ளிகள்)

03. லாகோஸ் என்ற குடியரசின் காணி அமைச்சரான கமால் என்பவன் பொது நூலகமொன்றினை கட்டும் பொது நோக்கத்துக்காக அவசரத்தேவை (urgency) என்ற அடிப்படையில் ‘கஹடவத்தை’ என அழைக்கப்படும் காணியைச் சுவீகரிக்கத் தீர்மானித்தான். அவசரத்தேவை இருந்தபோதிலும், நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்கு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. பின்னர், ∴பய்வ்-ஸ்டார் லிமிடட் (Five-star LTD.) என்ற கரைகடந்த கம்பனியொன்றிற்குக் குறித்த காணியை நகர அபிவிருத்தி அதிகார சபை பரிந்துரைத்தது. பதிலாக, சுவீகரிக்கப்பட்ட நோக்கத்துக்கு மேலதிகமாக ∴பய்வ்-ஸ்டார் லிமிடட்டானது (Five-star LTD.), வெளித்தோற்றத்தில் ஏதேனும் சில குறைந்தபட்ச வழியில், சுவீகரிக்கப்பட்ட காணியின் ஆரம்ப நோக்கத்தினைத் திருப்திப்படுத்த, கால்பந்து மைதானமொன்றினைக் கட்டமைக்க முன்மொழிந்தது.

அமைச்சரவைக் குறிப்பாணையொன்றினூடாக, லாகோஸ் குடியரசின் சனாதிபதியான சேனா என்பவன், முன்மொழியப்பட்ட ∴பய்வ்-ஸ்டார் லிமிடட்டின் (Five-star LTD.) திட்டத்திற்கு வலுவான பரிந்துரையொன்றினை சமர்ப்பித்தான். குறித்த காணியை உரித்து மாற்றம் செய்வதுடன் கூடிய சிறப்பு சலுகைக்கான ∴பய்வ்-ஸ்டார் லிமிடட்டின் (Five-star LTD.) கோரிக்கைக்கு ஆதரவாக சேனா மேலும் பரிந்துரை செய்தான். இதற்கிடையில், நகர அபிவிருத்தி அமைச்சரான மகேன் என்பவன் சேனாவினால் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பாணைக்கு ஒப்புதல் அளிப்பதில் அவனின் விருப்பமின்மையினை ஊடக சந்திப்பொன்றில் வெளிப்படுத்தினான். மறுநாள், பிரதம மந்திரியின் ஆலோசனையின்றி, சேனா, மகேனை நீக்கி, சேனாவின் மருமகனான தாரா என்பவனை நகர அபிவிருத்தி அமைச்சராக நியமித்தான். பின்னர், அமைச்சரவையானது எவ்வித வினவல் மற்றும் தெளிவுபடுத்தலின்றி குறித்த குறிப்பாணைக்கு ஒப்புதலளித்தது.

லாகோஸ் குடியரசின் அரசியலமைப்பு ஆட்சிமுறைமையானது இலங்கையினதை ஒத்ததாகக் கருதிக் கொள்க. நிறைவேற்றுத்துறை தத்துவங்களின் பின்னணியில் குறித்த நடவடிக்கைகளின் சட்ட வலிதாந்தன்மை தொடர்பாக ஆராய்க. தேவையேற்படின், பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள், தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்கள், மற்றும் அரசியலமைப்புக் கோட்பாடுகளால் உமது விடையானது ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.
(100 புள்ளிகள்)

04. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செலோனிகா அரசின் அரசாங்கமானது, நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்றினை அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது. சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுக் குழுவானது புதிய அரசியலமைப்பின் அடிப்படைகளை வரைவு செய்ய நீதித்துறையின் கட்டமைப்பு, தத்துவங்கள், பணிகள் மற்றும் ஏனைய அரசாங்கத்தின் இரு அமைப்புகளுடனான அதன் தொடர்பு என்பனவற்றை விளக்கப்படுத்தும், 'நீதித்துறை' என தலைப்பிடப்பட்ட அத்தியாயமொன்றினை அறிமுகஞ் செய்கிறது. நாட்டின் உச்ச நீதிமன்றங்களின் நீதிபதிகள் நியமனமானது அரசாங்கத்தின் நிறைவேற்றுத் தத்துவங்களைத் தனித்துப் பிரயோகிக்கும் சனாதிபதியால் செய்யப்படும் என்ற ஓர் ஏற்பாட்டை இவ்வத்தியாயம் உள்ளடக்கியுள்ளது. பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் உள்ளடக்கும் பாராளுமன்றினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் நடாத்தப்படும் விசாரணையொன்றினூடாக உச்ச நீதிமன்றங்களின் நீதிபதிகளை நீக்கவும் இவ்வத்தியாயம் பரிந்துரை செய்கின்றது. ஓய்வு பெறுவதற்கான நீதிபதிகளின் வயதெல்லையினை நீக்கவும் இக்குழு முன்மொழிகின்றது.

மேலும், கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பான தத்துவங்கள் ஒப்படைக்கப்பட்ட அமைப்பான தற்போதிருக்கும் நீதிச்சேவை ஆணைக்குழுவானது, பாராளுமன்றத்திற்கு அது மேலும் பொறுப்புக் கூறக்கூடிய வகையில் மீளாக்கம் மற்றும் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டுமென இக்குழுவினால் எண்ணக்கரு பத்திரம் (concept paper) முன்வைக்கப்பட்டது.

இப்புதிய அரசியலமைப்பு முன்மொழிவுகளின் மீது கவனஞ்செலுத்த சுயாதீனக் குழுவொன்றினால் மேலுள்ள முன்மொழிவுகள் மற்றும் அவற்றின் விளைவுகள் மீது கருத்துரை செய்யுமாறு நீர் வேண்டப்பட்டுள்ளீர் என்று கருதிக்கொள்க. செலோனிகா அரசின் அரசியலமைப்பின் கட்டமைப்பு மற்றும் அரசியலமைப்பு நியமங்கள் இலங்கையினை ஒத்ததாகக் கருதிக்கொள்க. மேலுள்ள முன்மொழிவுகள் மீது அறிக்கையொன்றினை தயாரிக்க.

(100 புள்ளிகள்)

05. நாட்டில் வெளியிடப்படும் பத்திரிகை ஒன்றான ‘ஞாயிறு உதயம்’ என்பது, முந்தைய நாள், நாட்டின் பாடசாலை ஆசிரியர்களின் ஒரு சில சங்கங்கள் கண்டன ஊர்வலமொன்றினையும் பேரணியொன்றினையும் கொழும்பில் நடாத்தியதாகத் தெரியப்படுத்துகின்றது. செய்தி அறிக்கையின் படி, பேரணிக்கு முன்னரும் ஊர்வலம் நடந்துகொண்டிருக்கும் வேளையிலும், பொதுக்கூட்டங்களை அனுமதிக்காத நாட்டின் சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் படி பேரணி மற்றும் ஊர்வலத்தை அனுமதிக்க முடியாதென போராட்ட ஒருங்கமைப்பாளர்களுக்கு பொலிஸ் தெரிவித்தது. நாட்டில் இருக்கும் சுகாதார வழிக்காட்டல்களுடன் இணங்கி அவர்கள் போராட்டத்தை நடத்துவார்கள் எனவும் போராட்டத்தை நடாத்துவதற்கெதிராக நீதிமன்ற ஆணைகள் எதுவுமில்லையெனவும் வாதிட்டு பொலிஸின் நிலைப்பாட்டினை ஒருங்கமைப்பாளர்கள் எதிர்த்தனர்.

பேரணியானது நடந்துகொண்டிருக்கும் வேளையில், பொலிஸ் அதனை வலுக்கட்டாயமாக நிறுத்தியதுடன் போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் ஒரு சிலர் கட்டுக்காவலுக்குள் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் இரவு முழுவதும் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டதுடன் மறுநாள், அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். குறித்த செய்தி அறிக்கையானது போராட்டத்தின் ஒரு சில பங்கேற்பாளர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டதுடன், பின்னர் தாமாகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், தாக்குதல் தொடர்பான சாட்டுதலை பொலிசார் மறுக்கின்றனர்.

நாட்டின் தன்னார்வ அமைப்பொன்றான '∴ப்ரி-கிரை' (Free-Cry) ஆனது, செய்திக் கட்டுரையை வாசித்த பின்னரும், சமூக வலைதளங்களினூடாக பகிரப்பட்ட பல்வேறு பதிவுகளைப் பார்த்த பின்னரும், இந்நிகழ்வின் மீது, அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றினைத் தாக்கல் செய்யத் தீர்மானிக்கிறது. அவர்கள் இவ்வழக்குடன் எவ்வாறு தொடர்புபடலாமென உமது ஆலோசனையை அவர்கள் நாடுகின்றனர். அதேநேரம், பொய்யான தகவல்களை வெளியிட்டமைக்காகவும், பொலிஸை இழிவுபடுத்தியமைக்காகவும் பத்திரிகைக்கெதிராக நீதிமன்ற வழக்கொன்றினைத் தொடங்க பொலிஸ் விரும்புகிறது.

மேலே கொடுக்கப்பட்ட சூழ்நிலையினை ஆய்வு செய்து, அதற்கு ஏற்புடையதாகக் கூடிய பொருத்தமான சட்டங்கள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களை விளக்கப்படுத்தி அறிக்கையொன்றினை எழுதுக.

(100 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் **<u>எவையேனும் இரண்டிற்கு (02)</u>** விடை தருக.

(அ) இலங்கை அரசியலமைப்பின் கடைசி இரு திருத்தங்கள், ஆட்சியை சனநாயகமயப் படுத்த மற்றும் அரசியல்மயமற்றதாக்க (depoliticize), எந்த அளவிற்கு சனாதிபதியின் நிறைவேற்றுத்துறை தத்துவத்தில் கணிசமான குறைப்பொன்றிற்கான மற்றும் சுயாதீன செயற்குழு மற்றும் ஆணைக்குழுக்களை உறுதிப்படுத்துவதற்கான தேவையினை எடுத்துரைக்கின்றது என்பதை கலந்துரையாடுக.

(50 புள்ளிகள்)

(ஆ) ஆட்சிமுறையின் வெவ்வேறு மட்டங்களில் செயற்படுத்தப்படும் வெவ்வேறு தேர்தல் முறைமைகள் எவ்வாறு இலங்கையில் சனநாயகத்தை மேம்படுத்துகிறது என்பதனை விளக்குக.

(50 புள்ளிகள்)

(இ) 'சோல்பரி அரசியலமைப்பானது சமயத்தை சுதந்திரமாகச் செயல்படுத்துவதை மீறும் சட்டங்களையும், ஒரு சமூகம் அல்லது சமயக் குழு பிரிதொன்றின் மீது சலுகையளிக்கும் அல்லது தீமையளிக்கும் சட்டங்களையும் இயற்றுவதிலிருந்தும் பாராளுமன்றமானது தடுக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றமும் மற்றும் கோமறைக் கழகமும் அவற்றின் தீர்மானங்களில், அரசியலமைப்பினை மீறுகின்ற சட்டங்களை செல்லுபடியற்றதாக்கத் தயங்கியதில்லை.'

மேலுள்ள கூற்றை ஆராய்க.

(50 புள்ளிகள்)

***************